ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

51 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**சுட்டெண்** : ....................................

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி I**
- **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**பகுதி II**
- **மூன்று** உப பகுதிகளைக் கொண்டது.
- **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ'**, **'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ பகுதி **I**, பகுதி **II** ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |
| 1 ஆம் பரீட்சகர் | 2 ஆம் பரீட்சகர் |
| | |

## பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

**1.** நவீன கலைப் பிரயோக அடிப்படையில் 'ஜைன பவனம்' ஓவியத்தை வரைந்த ஓவியக் கலைஞர்,
(1) ஜவன் பீரிஸ்.
(2) ஹரி பீரிஸ்.
(3) டபிள்யூ. ஜே. ஜீ. பீலிங்.
(4) ரிச்சார்ட் கேப்ரியல்.
(5) எல். டி. பி. மஞ்சு ஸ்ரீ. (.........)

**2.** எகிப்திய ஓவிய நிர்மாணிப்பின் மிக முக்கிய எதிர்பார்ப்பானது
(1) பாராவோ மன்னர்களின் வாழ்க்கைத் தகவல்களை பதிவு செய்வதாகும்.
(2) ஆட்சியாளரின் வீர பாராக்கிரமத்தைக் காட்டுவதாகும்.
(3) பாராவோ மன்னர்களின் சமய வழிபாடு மற்றும் நம்பிக்கையைக் காட்டுவதாகும்.
(4) பாராவோ மன்னர்களின் யுத்த வெற்றியைக் காட்டுவதாகும்.
(5) பாராவோ மன்னர்களின் வேட்டைக் காட்சியைக் காட்டுவதாகும் (.........)

**3.** கம்பளை காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலையில் காணப்படும் விசேட பண்புகள்
(1) கேத்திர கணித வடிவில் உடல் மற்றும் ஆன்மீகப் பண்புகளை சித்திரிப்பததாகும்.
(2) இந்து கலைப் பண்புகளுக்கேற்ப இரு திறந்த கண்களைச் சித்திரிப்பதாகும்.
(3) பரந்த தோள்கள் மற்றும் ஆளுமைப் பண்புகளை வெளிப்படுத்துவதாகும்.
(4) சந்திரீதியாக நீரலை வடிவில் காவியுடையை வெளிப்படுத்துவதாகும்.
(5) தீச்சுடர்வடிவிலான உச்சிக்குடும்பியையும் (சிரஸ்பத்த) நீள்வட்ட ஒளிவட்டத்தையும் பொதுப்பண்பாக பயன்படுத்துவதாகும். (.........)

[பக் 2 ஐப் பார்க்க

Past Papers Wiki




**4.** அநுராதபுர காலத்திலிருந்து கண்டிக் காலம் வரையும் சந்திரவட்டக்கல்லில் இருந்த ஆனாலும் படிப்படியாக மாற்றத்திற்குள்ளானது,

(1) பட்டிகளாகப் பிரித்து வேறுபடுத்தப்பட்ட விதமாகும்.
(2) அரைத் தாமரைப் பூ வடிவம் பூரணத் தாமரை வடிவமாக மாறிய விதமாகும்.
(3) கலை அம்சங்களை நிலைப்படுத்த ஒழுங்குபடுத்திய முறையாகும்.
(4) தீச்சுவாலையின் வடிவம் மற்றும் அளவின் மாற்றமாகும்.
(5) விலங்குருவங்களைக் காட்டும் திசையில் ஏற்பட்ட மாற்றமாகும். (.........)

**5.** இந்தியாவின் மாமல்லபுரத்தில் அமைந்துள்ள பஞ்ச பாண்டவர் இரதக் கோயில்களில் இரட்டை மாடி ரதம்

(1) அர்ச்சுணன் இரதமாகும்.
(2) தருமர் இரதமாகும்.
(3) திரௌபதி இரதமாகும்.
(4) நகுல, சகாதேவ இரதமாகும்
(5) பீமன் இரதமாகும் (.........)

● **6** தொடக்கம் **10** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை**, **1** தொடக்கம் **9** வரையில் இலக்கமிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


1


2


3


4


5


6


7


8


9

**6.** கட்டடக்கலை அம்சங்களாக அமைக்கப்பட்ட கலைப் படைப்புகள் எவை?

(1) **2, 3, 4** (2) **3, 4, 7** (3) **4, 5, 6** (4) **4, 6, 7** (5) **5, 6, 7** (.........)

**7.** கற்பனை உருவை அடிப்படையாகக் கொண்ட கலைப் படைப்புகள் எவை?

(1) **2, 5** (2) **5, 6** (3) **6, 7** (4) **6, 9** (5) **7, 9** (.........)

**8.** வரலாற்று புராணக் கதையுடன் தொடர்பான நிர்மாணிப்புகள் எவை?

(1) **1, 3** (2) **1, 5** (3) **1, 6** (4) **3, 6** (5) **6, 8** (.........)

**9.** செதுக்கல் நுட்பமுறையைக் கையாண்டு அமைக்கப்பட்ட நிர்மாணிப்புகள் எவை?

(1) **1, 2, 4, 5** (2) **1, 2, 4, 7** (3) **1, 2, 6, 9** (4) **1, 3, 6, 9** (5) **4, 6, 8, 9** (.........)

**10.** வார்ப்பு சிற்பநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட நிர்மாணிப்புக்கள் எவை?

(1) **2, 5, 6** (2) **2, 5, 8** (3) **5, 6, 7** (4) **6, 7, 8** (5) **7, 8, 9** (.........)

[பக் 3 ஐப் பார்க்க

● **11** தொடக்கம் **15** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** **A, B, C, D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


A


B


C


D


E

**11. A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பிரதிமை ஓவியம்
(1) ஜே. டீ. ஏ. பெரேரா கலைஞருடையதாகும்.
(2) ஸ்டேன்லி அபேசிங்க அவர்களுடையதாகும்.
(3) ஏ. சீ. ஜீ. எஸ் அமரசேகர அவர்களுடைதாகும்.
(4) ஹரி பீரிஸ் கலைஞருடையதாகும்.
(5) டேவிட் பெயின்டர் கலைஞருடையதாகும். (.........)

**12. B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மேரி கசற் கலைஞரின் ஓவியங்களில்
(1) அகடமிக் யதார்த்தவாத உத்திகள் கையாளப்பட்டுள்ளன.
(2) தனிமை மற்றும் பல்வேறு உளச்சிக்கல்களை வெளிப்படுத்துகின்றது.
(3) வர்ணங்களிலுள்ள எதிர்வினைத் தன்மை ஒழுங்குபடுத்தல் தந்திரோபாயமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.
(4) பண்டைய படவாக்க படிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.
(5) பின்னணி அத்தியாவசியமானதொரு அம்சமாக சித்திரிக்கப்பட்டுள்ளது. (.........)

**13. C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஜஸ்ரின் தெரணியகல கலைஞரின் இவ்வோவியம்,
(1) உருவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதேவேளை கலைப் பாணிகளையும் வெளிக் காட்டுகின்றது
(2) பொருட்களின் தன்மையை இயற்கையாக முன்வைத்ததொன்றாகும்.
(3) வெளிப்பாட்டுவாத கலை பண்புகளுடனான மையநிலைப்பட்ட ஒழுங்கமைப்பைக் கொண்டதாகும்.
(4) சாஸ்திராலய நுட்ப முறைகளுக்கேற்ப வரையப்பட்ட வெளிப்பாடாகும்.
(5) யதார்த்தவாத, கனவடிவவாத கலைப் பண்புகள் கலந்ததாகும். (.........)

**14. D** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள டபிள்யூ. ஜே. ஜீ பீலிங் கலைஞரின் ஓவியம்
(1) வடிவங்கள் இருபரிமாண வடிவில் தளம் முழுவதும் பரவிச் செல்லுமாறு காட்டப்பட்டுள்ளது.
(2) இயற்கையான ஆக்கபூர்வமான வடிவங்கள் பலவற்றின் சேர்க்கையிலான நிர்மாணமாகும்.
(3) எதிர்வர்ண பயன்பாட்டினால் இயற்கைத் தன்மையை விகாரப்படுத்திக் காட்டுகின்றது.
(4) அசையாத பொருட் கூட்டமொன்றை கனவடிவவாத வடிவில் காட்டப்பட்டுள்ள வெளிப்படுத்தலாகும்.
(5) இரு பரிமாண மற்றும் முப்பரிமாண வடிவங்களை அர்த்தமுள்ள வகையில் ஒன்றாக பொருத்துதலாகும். (.........)

**15. E** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள அம்ரிதா ஷேர்கில் கலைஞரின் ஓவியம்
(1) சாஸ்திராலய அறிவினால் போசிக்கப்பட்ட ஓவிய மொழியைக் கொண்டதாகும்.
(2) பாரம்பரிய வர்ணங்களினால் பாரம்பரியமல்லாத கருப்பொருளை அழகுபடுத்தியதாகும்.
(3) கிராமிய கலாசாரம், கலைப்பாணியுடன் கட்டியெழுப்பப்பட்டதாகும்.
(4) பல்வகை நிறங்களின் தன்மையினால் கருப்பொருளின் கருத்தைக் காட்டுவதாகும்.
(5) நவீனவாத கலைப் பிரவேச பாணியில் முன்வைக்கப்பட்ட படைப்பாகும். (.........)

[பக் 4 ஐப் பார்க்க

Past Papers Wiki




- **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** பின்வரும் **F, G, H, I, J** எனப் பெயரிடப்பட்டுள்ள செதுக்கல்களைக் கொண்ட பின்வரும் படங்களிலிருந்து தெரிவுசெய்க.


F


G


H


I


J

**16.** **F** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள அம்பக்க தேவாலய செதுக்கல்
(1) பல மனித உருவங்களை தேசியப் பண்புகளுடன் அமைக்கப்பட்ட நிர்மாணிப்பாகும்.
(2) மரச் செதுக்கல் கலைஞரின் சிறப்பைக் காட்டும் நிர்மாணிப்பாகும்.
(3) மர ஊடகத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டதாகும்.
(4) சட்டகத்தினுள் அரிதான கருப்பொருள் படவாக்கமாகும்.
(5) சமகால சமூக கருப்பொருளை தாழ் புடைப்பாக காட்டுவதாகும். (.........)

**17.** **G** எழுத்தினால் காட்டப்படுவது,
(1) நடனமாதர்களை சித்திரிக்கும் சட்டகச் செதுக்கல் ஆகும்.
(2) சமய ஊர்வலமொன்றைக் காட்டும் சட்டகச் செதுக்கல் ஆகும்.
(3) கடலாதெனிய நுழைவு மண்டபத்தில் காணப்படும் தாழ் புடைப்பு செதுக்கலாகும்.
(4) யாப்பகுவை அரச சபையின் அடித்தளத்தில் காணப்படும் சட்டகச் செதுக்கல் ஆகும்.
(5) நடனமாடும், இசைக் கருவிகளை இசைக்கும், பெண்களின் உருவங்களைக் கொண்ட சட்டகச் செதுக்கலாகும். (.........)

**18.** **H** எழுத்தினால் காட்டப்படும் சாஞ்சித் தோரணத்தில்
(1) பௌத்த சமய செய்திகள் செதுக்கப்பட்டுள்ளன.
(2) கிடைச் சட்டகம் (உடலிபத்) புத்தரின் வாழ்க்கைச் சம்பவங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு செதுக்கலாக்கப்பட்டுள்ளது.
(3) நிலைகுத்து தூண்களில் வரலாற்றுச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு செதுக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.
(4) குறியீடுகளைப் பயன்படுத்தி புத்தரானதன் பின்னதான நிகழ்வுகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.
(5) கிடைச் சட்டகத்தில் (உடலிபத்தில்) உள்ள செதுக்கல்கள் தொடர்ச்சியாக கதை சொல்லும் பாங்கில் செதுக்கப்பட்டுள்ளன (.........)


**19.** **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள அமராவதியிலுள்ள நாலாகிரி யானையை அடக்குதல் செதுக்கல்
(1) கலைஞரின் பாவங்களை வெளிப்படுத்தும் ஆற்றலை சிறப்பாக எடுத்துக்காட்டும் விசேட சட்டக நிர்மாணிப்பாகும்.
(2) தளம் முழுவதும் மனித மற்றும் விலங்கு உருவங்கள் பரவிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்ட செதுக்கலாகும்.
(3) யானை உருவங்களை இருமுறை பயன்படுத்தியதன் மூலம் சலிப்பான ஒழுங்கமைப்பைக் காட்டுவதாகும்.
(4) உயிரோட்டம் மற்றும் செயற்பாட்டினை குறைந்த மட்டத்தில் சித்திரிக்கும் வட்டவடிவ பலகையாகும்.
(5) கலைஞரின் குறியீட்டு பயன்பாடு மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பதைக் காட்டும் நிர்மாணமாகும்.(.........)


**20.** **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது
(1) உரோமர்கள் தமது யுத்த வெற்றிச் செய்தியை பயன்படுத்தி அமைக்கப்பட்ட வில் வளைவு செதுக்கலாகும்.
(2) ஜெருசலேம் சுற்றிவளைப்பைக் காட்டும் உரோம வில் வளைவு செதுக்கலாகும்.
(3) உரோம கட்டடக்கலை நிர்மாணமொன்றை அலங்காரப்படுத்திய செதுக்கலாகும்.
(4) டேசியான் இராணுவத்தின் தோல்வியைக் காட்டும் வில் வளைவுச் செதுக்கலாகும்.
(5) கொன்ஸ்டன்டைன் சக்கரவர்த்தியின் யுத்த வெற்றியைக் காட்டும் வில் வளைவு செதுக்கலாகும். (.........)

[பக் 5 ஐப் பார்க்க


● **21** தொடக்கம் **25** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** **K, L, M, N, O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் கலைப் படைப்புக்களிலிருந்து தெரிவுசெய்க.


K


L


M


N


O

**21.** **K** எழுத்தினால் காட்டப்படும் சிலை
(1) மகாராஜலீலா நிலையில் அமர்ந்திருக்கும் போதி சத்துவரின் உருவமாகும்.
(2) பொலன்னறுவையில் கண்டெடுக்கப்பட்ட பத்மபாணி போதிசத்துவரின் உருவாகும்.
(3) அனுராதபுர இறுதி அரைப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட அவலோகிதேஷ்வரர் போதிசத்துவர் உருவமாகும்.
(4) இந்து சமய செல்வாக்கிற்குட்பட்ட வார்ப்பு நுட்பமுறைக்கேற்ப தயாரிக்கப்பட்ட வெண் கலத்திலான சிலையாகும்.
(5) வெற்று வார்ப்பு முறையில் பூரணப்படுத்தப்பட்ட தங்கமுலாம் பூசப்பட்ட போதிசத்துவரின் சிலையாகும். (.........)

**22.** **L** எழுத்தினால் காட்டப்படும் ஹென்றி மூரின் சிற்பம்,
(1) சாஸ்திராலய இயற்பண்புகளை மாற்றியமைத்தவொன்றாகும்.
(2) பூங்கா சிற்பமொன்றிற்காக தயாரிக்கப்பட்ட வெண்கல ஊடகத்தினால் அமைக்கப்பட்ட நிர்மாணமாகும்.
(3) சாய்ந்திருக்கும் பெண்ணொருவரின் உருவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட வெளிப்படுத்தலாகும்.
(4) பெண்மையை சித்திரிக்கும் வடிவங்களைக் கொண்ட ஆக்கமாகும்.
(5) உடலின் கோறைப் பகுதிகளின் ஊடக சுற்றுச்சூழலுடன் இணைந்த கட்புல வெளிப்படுத்தலாகும்.(.........)

**23.** **M** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள டேவிட் சிலை நிர்மாணிப்பின்போது கலைஞர் மிகவும் கவனம் செலுத்தியது,
(1) மனித உடல் கட்டமைப்பு அம்சங்கள் தொடர்பாக தனது திறமையைக் காட்டுவதற்காகும்.
(2) தளர்வானதும் சுதந்திரமானதும் சந்தர்தியானதுமான வடிவங்களை தொகுத்துக் காட்டுவதற்காகும்.
(3) வெண்பளிங்கு கல்லுடன் இணைக்கப்படாமல் ஹெலனிஸ்டிக் கால சிறந்த பண்புகளை இணைப்பதற்காகும்.
(4) வீரனொருவரிடம் காணப்படும் ஆளுமைப் பண்புகளுடனான சக்தியின் குறியீடொன்றை நிர்மாணிப்பதற்காகும்.
(5) நுண்ணறிவு மற்றும் சிந்தனைப் பார்வையுடனான மனிதரொருவரை நிர்மாணிப்பதற்காகும். (.........)

**24.** **N** எழுத்தினால் சித்திரிக்கப்படும் மைக்கல் ஆஞ்சலோவின் மோசஸ் சிலை நிர்மாணிப்பின் நோக்கம்
(1) பத்து கட்டளைகளை குறியீடாகக் காட்டுவதற்கு கற்பலகையுடன் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
(2) 11 வது ஜூலியஸ் பாப்பாண்டவரின் கல்லறையை குறியீடாகக் காட்டுவதாகும்.
(3) சிஸ்டைன் தேவமனையில் கிரேக்க செந்நெறி கலையின் சிற்ப அம்சங்களை காட்சிப்படுத்துவதற்காகும்.
(4) பாவங்களின் வெளிப்பாடுகள் மூலம் ஞானத்தின் மகிமையை காட்டுவதாகும்.
(5) தீர்க்கதரிசி மற்றும் கட்டுமஸ்தான தேகக்கட்டமைப்புக் கொண்ட பண்டிதரொருவரை சித்திரிப்பதாகும். (.........)

**25.** **O** எழுத்தினால் சித்திரிக்கப்படும் எகிப்திய சிலை
(1) எகிப்திய புராதன இராசதானி காலத்திற்குரிய சுண்ணாம்புக் கல்லினால் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
(2) மரபுரீதியான பண்புகளிலிருந்து விடுபட்ட புதிய இராசதானி கால சிலையாகும்.
(3) அரசகுடும்பத்தைச் சேர்ந்த சேவகரொருவரை சித்திரிப்பதாகும்.
(4) எழுத்து உபகரணங்களைக் கொண்டு எழுதுபவரொருவரைச் சித்திரிக்கும் செதுக்கலாகும்.
(5) மத்திய இராசதானி காலத்தின் செயற்பாட்டை சித்திரிக்கும் சிலையாகும். (.........)

PAST PAPERS WIKI

[பக் 6 ஐப் பார்க்க

- **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

**26.** பின்வரும் ஓவியர்களுடன் தொடர்புபடும் கலை இயக்கங்களை ஒழுங்கமுறையில் குறிப்பிடுக.
**ஜோர்ஜ் பிராக், எட்காடெகா, சல்வடோர் டாலி, வசிலி கன்திஸ்கி** மற்றும் **வின்சன்ட் வன்கோ**
(1) அரூபவாதம், பின் மனப்பதிவுவாதம், கனவடிவவாதம், மனப்பதிவுவாதம், மீயதார்த்தவாதம்
(2) மனப்பதிவுவாதம், மீயதார்த்தவாதம், பின் மனப்பதிவுவாதம், அரூபவாதம், கனவடிவவாதம்,
(3) பின் மனப்பதிவுவாதம், மீயதார்த்தவாதம், கனவடிவவாதம், அரூபவாதம், மனப்பதிவுவாதம்
(4) கனவடிவவாதம், மனப்பதிவுவாதம், மீயதார்த்தவாதம், அரூபவாதம், பின் மனப்பதிவுவாதம்
(5) மீயதார்த்தவாதம், கனவடிவவாதம், பின் மனப்பதிவுவாதம், அரூபவாதம், மனப்பதிவுவாதம் (………)

**27.** சுவரொட்டி என்பது,
(1) ஏதேனும் கருப்பொருளை குறியீடாக வெளிப்படுத்தும் ஊடகமாகும்.
(2) ஏதேனும் ஒரு செய்தியை எளிமையாக, தெளிவாக, வேகமாக மேற்கொள்ளும் பிரச்சார ஊடகமாகும்.
(3) சமகால கருப்பொருளொன்றை மனங்கவரும் வகையில் கட்புல ஊடகத்தை அடிப்படையாகக் கொண்டு சமூகமயப்படுத்தும் பிரபல்யமான ஊடகமாகும்.
(4) தொடர்பாடல் செயற்பாட்டில் வேகமான பிரசார ஊடகமாகும்.
(5) சிக்கலான கருப்பொருளொன்றை அச்சு பதிக்கப்பட்ட ஊடகத்தின் மூலம் வெளிப்படுத்தும் தொடர்பாடலாகும். (………)

**28.** யதார்த்த வாதம் என்பது,
(1) தூரநோக்கு, முப்பரிமான பண்புகள் ஆகிய கட்புல கலைக்கோட்பாட்டை சரியாக வெளிப்படுத்துவதாகும்.
(2) இயற்கையான உலகில் இயற்கையான மற்றும் செயற்கைப் பொருட்களை உள்ளவாறே வரைதலாகும்.
(3) மேற்கத்திய உலகால் அறிமுகப்படுத்தப்படும் சாஸ்திராலய கோட்பாடுகளை பாதுகாப்பதாகும்.
(4) உண்மையான உலகத்தில் காணப்படும் பொருட்களை அரூபவடிவில் வெளிப்படுத்தலாகும்.
(5) பொருட்களின் உண்மையான வடிவங்கள் பல கோணங்களில் அவதானித்து வெளிப்படுத்துவதாகும். (………)

**29.** பின் மனப்பதிவாத நிர்மாணிப்பில் கலைஞர்கள் மிகவும் கவனம் செலுத்தியது
(1) மனப்பதிவுவாத நுட்பமுறைகளை புதுமையுடன் தொடர்ந்து கொண்டு நடத்துவதற்காகும்.
(2) ஒரேவிதமான சலிப்பான நிலவும் மனப்பதிவுவாத நுட்பமுறையை மீறுவதற்காகும்
(3) புதிய பரீட்சித்தலும் ஆழ்ந்த புதிய வெளிப்பாடுகளுடனான பொருட்களை ஆராய்வதுமாகும்.
(4) மனப்பதிவுவாதிகள் பயன்படுத்திய நுட்பமுறைகளுக்குப் பதிலாக புதிய நுட்பமுறைகளை ஆய்வு செய்வதாகும்.
(5) பொருட்களின் மீது ஒளியின் எதிர்வினையை ஆராய்தலாகும். (………)

**30.** அரூபவாதத்திற்கு அடிப்படையாக அமைவது
(1) அடையாளம் காணக்கூடிய வடிவம் அல்லாத கட்புல வெளிப்படுத்தல்களுக்கானதாகும்
(2) கற்பனை நோக்கங்கள் மற்றும் கட்டியெழுப்பப்பட்ட அரூபவடிவங்களை வெளிப்படுத்தல்களுக்காகும்.
(3) இயற்கைக் கட்புல வடிவங்களை காட்சிரீதியாக எளிமைப்படுத்தி மீள் உருவாக்கம் செய்தலாகும்
(4) இயற்கை அல்லது அதன் பொருட்கள், அதே விதமாக போலச்செய்தல் மற்றும் மீள் உருவாக்கம் செய்தலைக் கைவிடுதல் ஆகும்.
(5) கோடுகளினால் கட்டியெழுப்பப்பட்ட அசையும் மற்றும் நெகிழ்வான வடிவங்கள், நிறங்களை பயன்படுத்தல். (………)


- **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.

**31.** அம்பக்க தேவாலயம் கட்டடக் கலையில் முக்கியத்துவம் பெறுவது,



(1) முருகனுக்காக அமைக்கப்பட்ட தேவாலயமாக இருப்பதனாலாகும்.
(2) தெல்மடை மூலாச்சாரியாரின் சிறப்பான நிர்மாணிப்பு என்பதனாலாகும்.
(3) கூரை நிர்மாணத்தின்போது பயன்படுத்தப்பட்டுள்ள புதிய நிர்மாண அம்சங்களாகும்.
(4) மர ஊடகத்தை கலையம்சரீதியில் பயன்படுத்தியுள்ள விதம் காரணமாகவாகும்.
(5) திறந்த மண்டபமாக அமைக்கப்பட்டுள்ள கட்டட வடிவமைப்பின் காரணத்தினாலாகும். (………)

**32.** இங்கு படத்தில் காணப்படுவது



(1) அனுராதபுர காலத்தில் அமைக்கப்பட்ட ஹத்திக்குச்சி விகாரை வட்டதாகையாகும்.
(2) இரண்டு மண்டபங்களை கொண்ட திரியாய் வட்டதாகையாகும்.
(3) பொலன்னறுவை தலதா முற்றத்தில் காணப்படும் வட்டதாகையாகும்.
(4) இரண்டு கற்றூண் வரிசைகளின் மேல் கூரை வைக்கப்பட்டிருக்கும் மெதிரிகிரிய வட்டதாகையாகும்.
(5) அனுராதபுர காலத்தின் அம்பஸ்தல வட்டதாகையாகும். (………)

[பக் 7 ஐப் பார்க்க

**33.** இங்கு காணப்படும் இராஜராஜேஸ்வரம் கோயில்,




(1) சோழ கட்டடக்கலை நிர்மாண பண்புகளுக்கேற்ப தஞ்சாவூரில் அமைந்துள்ள கோவிலாகும்.
(2) கருங்கற்களைக் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்பைக் கொண்ட கோவிலாகும்.
(3) 1வது இராஜராஜ மன்னனால் அமைக்கப்பட்ட மிகப்பெரிய கோவிலாகும்.
(4) கோபுரங்களுடனான விமானங்கள் மற்றும் சிகரங்களை உடைய இந்து கோவிலாகும்.
(5) தென்னிந்திய கலை மரபிற்கேற்ப கற்களால் அமைக்கப்பட்ட கோவிலாகும். (………)

**34.** இங்கு காணப்படுவது



(1) கி.மு. 2570 இல் அமைக்கப்பட்ட மிகப்பெரிய பிரமிட்டாகும்.
(2) கப்றே மன்னனால் அமைக்கப்பட்ட இரண்டாவது மிகப்பெரிய பிரமிட்டாகும்.
(3) எகிப்தின் மூன்று பெரிய பிரமிட்களுள் ஒன்றான குப்பு (kufu) பிரமிட்டாகும்.
(4) எகிப்தில் மத்திய இராசதானி காலத்தில் அமைக்கப்பட்ட இரண்டாவது மிகப்பெரிய பிரமிட்டாகும்.
(5) கப்றே பாராவோவின் கல்லறையாக அமைக்கப்பட்ட பிரமிட்டாகும். (………)

**35.** இங்கு காட்டப்பட்டுள்ளது,



(1) சமோரா ஹேரா தெய்வத்திற்காக அமைக்கப்பட்ட இரெக்தியன் கட்டிடத்தின் அயோனிக் தூணாகும்.
(2) ஏதன்ஸில் சியுஸ் தெய்வத்திற்காக அமைக்கப்பட்ட தேவாலயத்தின் கொரிந்தியன் தூணாகும்.
(3) அதீனா தேவதைக்காக அமைக்கப்பட்ட பாத்தினன் தேவாலயத்தின் டொறிக் தூணாகும்.
(4) ஏதன்ஸில் சியுஸ் தெய்வத்திற்காக அமைக்கப்பட்ட பாத்தினன் தேவாலயத்தின் அயோனிக் துணாகும்.
(5) அதீனா தேவதைக்காக அமைக்கப்பட்ட பாத்தினன் தேவாலய கொரிந்தியன் தூணாகும். (………)

● **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை,** பின்வரும் ஓவியத்தைப் பயன்படுத்தித் தெரிவுசெய்க.



**36.** இலங்கை கலைச் சங்கத்தின், ஏ. சீ. ஜீ, எஸ் அமரசேகர கலைஞர்,
(1) கீழைத்தேய ஓவியப் பாணியை அடிப்படையாகக் கொண்டவராவார்.
(2) சாஸ்திராலய யதார்த்தவாத விதிமுறைகளை பின்பற்றிய ஒருவராவார்.
(3) கதை ஓவியத்திற்காக ஆர்வம் காட்டியவராவார்.
(4) மரபுரீதியான ஓவிய வழிமுறைகளைப் பின்பற்றிய ஒருவராவார்.
(5) தனக்கேயுரிய மரபொன்றை பின்பற்றிய ஒருவராவார். (………)

[பக் 8 ஐப் பார்க்க

**37.** இங்கு கருப்பொருளின் ஊடாக சித்திரிக்கப்பட்டுள்ளது
(1) யதார்த்தவாதமாக மனித உருவங்களை வரைவதற்கு எடுத்த முயற்சியாகும்.
(2) மத்தியதர வர்க்கத்தினரின் குடும்ப வாழ்க்கைத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விவரிப்பாகும்.
(3) ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் ஏழ்மைத் தொடர்பான வெளிப்படுத்தலாகும்.
(4) கிராமிய வாழ்க்கைத் தொடர்பாக குறியீடாக மேற்கொள்ளப்பட்ட விவரிப்பாகும்.
(5) கிராம வாழ்க்கையின் துக்ககரமான சந்தர்ப்பத்தை மீள் நிர்மாணம் செய்வதாகும். (.........)

**38.** ஒழுங்கமைப்பின் அடிப்படை நோக்கமானது
(1) மனித மெய் நிலைகள் நிகழ்விற்கேற்ப இருப்பதைப்போன்றே ஒழுங்கமைத்தலாகும்.
(2) மனித உருவங்களைப்போன்றே பல்வேறு பொருட்கள் ஒன்றிற்கொன்று பொருந்தும்வகையில் முன்வைத்தலாகும்.
(3) மனித உருவங்களைக் காட்டிலும் பொருட்களின் வெளிப்பாட்டிற்கு முன்னுரிமை வழங்குதல்.
(4) கருப்பொருளை விவரிப்பதற்கு பல உருவங்களை குறியீடுகளாக பயன்படுத்துவதாகும்.
(5) வர்ணங்களைக் கலப்பதன் மூலம் உணர்வுகளை வெளிப்படுத்துவற்கு முதலிடம் வழங்குவதாகும். (.........)

**39.** 'தச்சனின் வீடு' ஓவியத்தில்
(1) பண்டைய வர்ணங்கள் சிறப்பாக எண்ணெய் ஊடகம் மூலம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
(2) இயற்கையைப் போலச் செய்வதற்காக பொருத்தமான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(3) ஒளி மற்றும் இருளுக்கிடையில் கடும் எதிர்வினைகள் வெளிப்படும் வகையில் வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(4) பல்வகை வர்ண அம்சங்கள் உள்ள பண்டைய வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(5) வர்ண பயன்பாட்டின்போது வர்ண மாற்றம் தெரியும் வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (.........)

**40.** உணர்வுகளின் வெளிப்பாடு தொடர்பான மிகப் பொருத்தமான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) மத்திய வர்க்க சமூகத்தின் வறுமை மனித உருவங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் முறை பாராட்டத்தக்கது
(2) மனித உருவங்கள் உணர்வுகள் வெளிப்படும் வகையில் பயன்படுத்தியிருக்கும் விதம் போற்றத்தக்கது.
(3) குறியீடுகளைப் பயன்படுத்தி வெளிப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டிருக்கும் முயற்சி பாராட்டத்தக்கது.
(4) யதார்த்தபூர்வமாகவும், உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலும் மனித உருவங்கள் உட்பட அனைத்தும் வரையப்பட்டிருக்கும் விதம் போற்றத்தக்கது
(5) மனித உருவங்களின் வெளிப்புற அழகைப் போன்றே உள்ளுணர்வுகளை வெளிப்படுத்த எடுத்த முயற்சி சிறப்பானது. (.........)

* *

PAST PAPERS WIKI

[பக் 9 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

51 T I

## பகுதி II

※ இப்பகுதி **மூன்று** உப பகுதிகளைக் கொண்டுள்ளது.

※ **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ'**, **'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

(தேவையான இடங்களில் பரும்படிப் படங்களைப் பயன்படுத்துதல் உங்களுக்கு அனுகூலமாக அமையும்.)

## பகுதி - அ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**1.** அநுராதபுரத்தில் தொடங்கிய புதிய கட்டடக்கலைப் புத்துயிர்ப்பு பௌத்தசமய கட்டடக்கலையில் பல நிர்மாணிப்புகள் தோன்றுவதற்கு காரணமாயிற்று.

(i) பிக்குமார்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** மனை வகைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) நில்லக்கம போதிமனை தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) அநுராதபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரட்டைக் கேணி மற்றும் பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட தாமரைத் தடாகம் என்பன சிறந்த கலைப்பாங்கிலான நிர்மாணிப்புகளாகும். மாதிரி மற்றும் கலைத்துவ திறன்கள் தொடர்பாக ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்க. (08 புள்ளிகள்)

**2.** இலங்கையில் சமயசார்பான ஓவிய நிர்மாணிப்பில் ஈடுபட்ட ஓவியக் கலைஞர்கள் பல்வேறு கருப்பொருள்களின் கீழ் சிறந்த நிர்மாணங்களை உருவாக்கினார்கள்.

(i) நாராயணசுவாமி கலைஞரால் வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவிலில் வரையப்பட்ட **இரண்டு** ஓவியங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) டேவிட் பெயின்டர் (David Paynter) கலைஞரால் வரையப்பட்ட கண்டி திரித்துவ கல்லூரி தேவ ஆராதனை மண்டபத்தில் காணப்படும் 'நல்ல சமாரியன்' ஓவியம் தொடர்பாக சுருக்கமாக மதிப்பீடு செய்க. (05 புள்ளிகள்)

(iii) 'இயமனை தோற்கடித்தல்' ஓவியத்தை பௌத்த ஓவியக் கலைஞர்கள் பல்வேறு விதமாக வரைந்துள்ளனர். பொரல்லை கோதமி விகாரை ஓவியத்தை வரைந்த ஜோர்ஜ் கீட் மற்றும் பெல்லன்வில ரஜ மகா விகாரை ஓவியத்தை வரைந்த சோமபந்து வித்தியாபதி கலைஞர்கள் 'இயமனை தோற்கடித்தல்' ஓவியத்தை வரைந்த விதம் தொடர்பாக ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்க. (08 புள்ளிகள்)

**3.** பொலன்னறுவைக் காலத்தில் இந்து சமய எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு பல சமயச் சிலைகள் கோயில்களுடன் இணைந்ததாக அமைக்கப்பட்டுள்ளன.

(i) இந்து சமய சிலைகளை நிர்மாணிக்கும்போது பயன்படுத்தப்பட்ட **இரண்டு** நுட்பமுறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சிவ சோமஸ்கந்த சிலை தொடர்பாக சுருக்கமாக அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) இந்து சமய சிலைகளுக்கிடையில் நடராஜர் சிலை விசேடமானதாகும். அதன் குறியீட்டு வெளிப்பாடுகள் மற்றும் கலைப் பண்புகள் தொடர்பாக மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

[பக் 10 ஐப் பார்க்க

## பகுதி - ஆ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**4.** காந்தார மற்றும் மதுரா குருகுலங்கள் பௌத்தசமய சிற்பங்கள் பலவற்றை உலகுக்கு தோற்றுவித்த கலை மத்திய நிலையங்களாகும்.

(i) காந்தார கலை மரபில் நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** சிலைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) புத்தர் சிலையின் தோற்றுவாய்க்காக காந்தார கலை மரபுகள் உதவியுள்ள விதத்தினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) மதுரா மற்றும் சாரணாத் குருகுலங்களின் நிர்மாணிப்புகள் குப்தர் காலத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்தது. இக்கூற்றை உறுதிப்படுத்துவதற்கு மதுரா மற்றும் சாரணாத் புத்தர் சிலைகளின் சிறந்த சிற்ப பண்புகள் மற்றும் உணர்வு வெளிப்பாட்டுத் தன்மைகளின் அடிப்படையில் விளக்குக. (08 புள்ளிகள்)

**5.** சிந்துவெளி நாகரிகம் மிக முன்னேற்றமடைந்த மக்கள் கூட்டத்தினர் வாழ்ந்த புராதன குடியிருப்பாகும்.

(i) சிந்துவெளி மக்கள் கலைப் படைப்புக்களை நிர்மாணித்தபோது பயன்படுத்திய **இரண்டு** நுட்பமுறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சிந்துவெளி மக்கள் மனித உருவங்களை நுட்பமாக ஆராய்ந்து நிர்மாணிப்பதில் வல்லவராவர். **ஓர்** உதாரணம் மூலம் சுருக்கமாக இதனை அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) சிந்துவெளி நாகரிகத்தில் மிக முன்னேற்றமடைந்த கட்டடக்கலை நிர்மாணத் தொழிநுட்பம் காணப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இக்கூற்றை அவர்களின் கட்டடக்கலை நிர்மாணங்களை அடிப்படையாகக் கொண்டு உதாரணங்களுடன் விளக்குக. (08 புள்ளிகள்)

## பகுதி - இ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**6.** ஐரோப்பாவில் அருகருகே அமைந்திருந்த இரண்டு இராச்சியங்களான கிரேக்கம் மற்றும் உரோமம் ஆகியன கலைப்படைப்புகள் பலவற்றை உலகுக்கு வழங்கிய நாடுகளாகும்.

(i) கிரேக்க தொன்மைக்கால சிற்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) உரோம கட்டடக் கலையின் சிறந்த நிர்மாணமான ரொஜன் தூண் (The Trajan Column) தொடர்பாக சுருக்கமான கலைத்துவ மதிப்பீடு செய்க. (05 புள்ளிகள்)

(iii) கிரேக்க மற்றும் உரோம கலைஞர்கள் மனித உருவங்களை, ஓவியங்களுக்காக பயன்படுத்திய விதம் மற்றும் சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீட்டுரீதியாக மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

**7.** இத்தாலியில் தோன்றிய மறுமலர்ச்சிக் காலம் உன்னத கலைப்படைப்புகள் பலவற்றை உலகுக்கு வழங்கிய காலகட்டமாகும்.

(i) மைக்கல் ஆஞ்சலோவினால் நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** ஓவியங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மறுமலர்ச்சிக் கலையின் பொதுப் பண்புகள் தொடர்பாக சுருக்கமாக அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) லியானோ டாவின்சியின் 'பாறையின் மீது கன்னி மரியாள்' மற்றும் ரபாயெல் சன்சியோவின் 'அல்பா மடோனா' ஆகிய ஓவியங்கள் தொடர்பாக அவற்றின் மாதிரி மற்றும் கலைப் பண்புகள் ஆகியவற்றை உள்ளடக்கி ஒப்பிட்டுரீதியான பகுப்பாய்வு செய்க. (08 புள்ளிகள்)

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

චිත්‍ර කලාව II
**சித்திரக்கலை II**
Art II

**51 T II**

පැය තුනයි
***மூன்று மணித்தியாலம்***
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள் தொகுதியை நன்றாக விளங்கிக்கொள்வதற்கு மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணைச்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.
- வர்ணச் சித்திரம் வரைவதற்காக உமக்கு வழங்கப்பட்டுள்ள விசேட **வரைதல் தாளைப்** (Drawing paper) பயன்படுத்துக. வேறு எந்தவொரு சித்திரத்தையோ பரும்படிக் குறிப்பையோ வரையத் தேவையில்லை.
- உமது விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும்போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

## இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டச் சித்திரமும்

பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள்தொகுதியை வரைந்து, வர்ணந்தீட்டுக.

❊ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.

❊ பொருள்களின் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.

❊ உமக்குத் தெரிகின்ற விதத்தில் பொருள்தொகுதியை வரைந்து அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந்தீட்டுக.

❊ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.

❊ பொருள்தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.

❊ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள ஆதாரப்பலகையின் அளவைப் பொருள்கூட்டத்திற்குப் பொருத்தமானதாக மாற்றிக்கொள்ள முடியும்.

❊ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் ஆகிய வர்ண ஊடகங்களுள் ஒன்றையோ சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளலாம்.

❊ ❊ ❊

Past Papers Wiki



සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

චිත්‍ර කලාව III
சித்திரக்கலை III
Art III

51 T III

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

- ※ உமது **சுட்டெண்ணையும்** தெரிவுசெய்த **வினாவின் இலக்கத்தையும்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.
- ※ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் போன்ற வர்ண ஊடகம் ஒன்றையோ அல்லது ஊடகங்கள் சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளமுடியும்.
- ※ தேவைப்படுவோருக்குத் திசுத்தாள் வழங்கப்படும்.
- ※ சித்திரத்தைக் கையளிக்கும்போது அது முழுமையாக உலர்ந்திருத்தல் முக்கியமாகும். ஈரமான சித்திரங்கள் ஒன்றுடனொன்று ஒட்டிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளமையினால் அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

- பின்வரும் **அ, ஆ, இ** ஆகிய மூன்று பகுதிகளிலிருந்து **ஒரு** தலைப்பை **மாத்திரம்** தெரிவுசெய்து, வர்ணச் சித்திரம் **ஒன்றை** வரைக.

### பகுதி - அ : சித்திர ஒழுங்கமைப்பு

1. குரங்குக் கூட்டத்திற்குள் அகப்பட்ட உல்லாசப் பிரயாணிகள் சிலர்
2. கிராமியச் சூழலில் தொலைக்காட்சி நாடகப்படப்பிடிப்பு நடைபெறும் சந்தர்ப்பமொன்று
3. தானசாலையொன்றில் உங்கள் மனங்கவர்ந்த சந்தர்ப்பம் ஒன்று
4. கடும் மழையிலும் காற்றிலும் பாதிப்புக்குள்ளாகும் பாதசாரிகள்

### பகுதி - ஆ : அலங்கார ஆக்கம்

5. 4 அடி விட்டமுள்ள வட்டவடிவ மேசைக்குப் பொருத்தமான ஒரு பக்கம் 6 அடிகளைக் கொண்ட சதுர வடிவ மேசை விரிப்பொன்றின் மத்திய பகுதியை அடிப்படையாகக் கொண்டு வட்டவடிவில் பரவிச் செல்லுமாறு முழுத்தள அலங்காரமொன்றை மரபுரீதியான தாவர மற்றும் விலங்குருவங்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டு நிறம் தீட்டுக. (அளவை பரிமாணத்திற்கேற்ப அமைக்குக).
6. வாகனங்கள் பலவற்றின் வடிவங்களை அலங்கார அலகாகப் பயன்படுத்தி மேல் சட்டைக்குப் பொருத்தமான பரவல் அலங்காரமொன்றை $9'' \times 9''$ அங்குல அளவில் தயாரித்து நிறம் தீட்டுக.
7. நீர்வாழ் உயிரினங்களை பாதுகாக்கும் தேசிய மட்ட செயலமர்வொன்றின் நுழைவுக் கதவின் முன்னால் காட்சிக்கு வைக்கப் பொருத்தமான $6' \times 12'$ அடி அளவில் பதாகையொன்றை திட்டமிட்டு நிறந்தீட்டுக (அளவினை பரிமாணத்திற்கேற்ப தயாரித்துக்கொள்க.)

### பகுதி - இ : கிறபிக் சித்திர ஆக்கம்

8. 'இழந்த பாசம்' எனும் பெயரில் எழுதப்பட்ட புதுக்கவிதை பாடல்களுக்காக அதன் உள்ளடக்கத்தை விவரிக்கும் வகையில் விளக்கச் சித்திரமொன்றை அரூப வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்குக.
9. 'வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியக்கலை' எனும் பெயரில் எழுதப்பட்ட நூலொன்றிற்குப் பொருத்தமான மேலட்டையொன்றை திட்டமிட்டு நிறந்தீட்டுக. (முன்னட்டை, தடிப்பு மற்றும் பின்னட்டை ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்)
10. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பெண்களுக்கான வாசனைத் திரவியப் போத்தலொன்றை வெளிநாட்டுச் சந்தையில் அறிமுகப்படுத்துவதற்குப் பொருத்தமான வகையில் பொதியிடக்கூடிய பெட்டியொன்றின் தளவடிவம் தெரியும் வகையில் திட்டமிட்டு நிறந்தீட்டுக.

* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library